பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

06 02 2025 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தில்லி சட்டப்பேரவை தேர்தலில் 60 புள்ளி நான்கு இரண்டு சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.
2. குஜராத் மாநிலத்தின் ரயில்வே கட்டமைப்புக்கு பட்ஜெட்டில் 17 ஆயிரத்து 155 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது அம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்று உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.
3. இந்தியா - ஜப்பான் இடையே எஃகு துறையில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்த பேச்சுக்கள் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.
4. தென்கொரியா அதிபர் திரு **Yoon suk yeol** -யின் தடுப்பு காவல் நீட்டிக்கப்பட்டுள்ளது.
5. சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>*----- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

தில்லி சட்டப்பேரவை தேர்தலில் 60 புள்ளி நான்கு இரண்டு சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அதிகபட்சமாக தில்லியின் வடகிழக்கு மாவட்டங்களில் 66 புள்ளி இரண்டு ஐந்து ஐந்து சதவீத வாக்குகளும், குறைந்தபட்சமாக தில்லியின் தென்கிழக்கு மாவட்டங்களில் 56 புள்ளி ஒன்று ஆறு சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

வாக்குப்பதிவு நேற்று அமைதியாக நடைபெற்று முடிந்ததாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தில்லி சட்டப்பேரவை தேர்தலோடு தமிழகத்தின் ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் 67 புள்ளி ஒன்பது ஏழு சதவீத வாக்குகளும், உத்தரபிரதேசத்தின் மில்கிபூர் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் 65 புள்ளி மூன்று ஐந்துசதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

இந்த தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை மறுநாள் எண்ணப்படுகின்றன.

**[]<<<>>>[]**

குஜராத் மாநிலத்தின் ரயில்வே கட்டமைப்புக்காக பட்ஜெட்டில் 17 ஆயிரத்து 155 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதற்காக பிரதமர் திரு நரேந்திரமோடி, மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் ஆகியோருக்கு உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா நன்றி தெரிவித்துள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், கடந்த 2009-முதல் 2014-ஆம் ஆண்டு வரை மத்தியில் ஆட்சியில் இருந்த அரசு குஜராத் மாநிலத்திற்கு 589 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கியதாகவும், தற்போது அது 29 மடங்கு அதிகரித்துள்ளதகாவும் குறிப்பிட்டுள்ளார்.

குஜராத்தில் தற்போது ரயில் வழித்தடங்கள் 97 சதவீதம் அளவுக்கு மின்மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிதி ஒதுக்கீடு குஜராத் மாநிலத்தின் வர்த்தகம், தொழில்துறை, போக்குவரத்து மற்றும் வேலைவாய்ப்புகளை மேலும் அதிகரிக்கும் என்று திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

திரிபுராவில் அரசு பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாயிரத்து 800-க்கும் மேற்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகள் நேற்று வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் காணொலி காட்சி வாயிலாக கலந்து கொண்ட மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா, வேலைவாய்ப்பு வழங்குவதில் திரிபுரா அரசு எந்தவித பாகுபாடுமின்றி வெளிப்படைத் தன்மையுடன் நடந்து கொள்வதாக கூறினார்.

திரிபுராவில் செயல்பட்டு வந்த போராட்டக் குழுக்கள் சரணடைந்து மைய நீரோட்டத்தில் இணைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

**Bru-reang** சமூக மக்களின் வாழ்வாதாரத்தில் மத்திய அரசு நேரடி மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளதாகவும் அவர் கூறினார்.

அவர்களுக்கு நிரந்தர குடியிருப்பு வசதி, கல்வி, சுகாதாரம் மற்றும் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

இந்தியா - ஜப்பான் இடையே எஃகு துறையில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்த பேச்சுக்கள் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இந்தியாவின் சார்பில் எஃகு துறை இணைச் செயலாளர் திரு வினோத் குமார் திரிபாதியும், ஜப்பான் நாட்டின் சார்பில் அந்நாட்டு வர்த்தகத்துறை துணை தலைமை இயக்குநர் திரு **Hideyuai urata**-வும் பங்கேற்றனர்.

இந்தியா - ஜப்பான் இடையே எஃகு உற்பத்தியை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் குறித்தும், தற்போதைய பொருளாதார வளர்ச்சி குறித்தும் விவாதிக்கப்பட்டது.

எஃகு வர்த்தகத்தில் சர்வதேச சந்தை குறித்த அனுபவங்களை இருதரப்பினரும் பரிமாறிக் கொண்டனர்.

எஃகுத் துறையில் ஆராய்ச்சியை ஊக்குவிப்பதற்கான இந்தியாவின் நிலைப்பாடு குறித்தும், ஜப்பான் நாட்டின் முதலீட்டாளர்களுக்கு இத்துறையில் வாய்ப்புகள் குறிததும் இருவரும் விவாதித்தாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியதாக அந்நாட்டு அரசால் திருப்பி அனுப்பப்பட்ட இந்தியர்கள் 104 பேர் நேற்று பஞ்சாப் மாநிலம் அம்ரித்சர் வந்தடைந்தனர்.

அமெரிக்க ராணுவ விமானத்தில் வந்திறங்கிய அவர்களில் 30 பேர் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்களாவர். மற்றவர்கள் குஜராத், மகாராஷ்டிரா, உத்திரபிரதேசம், ஹரியானா மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்.

தாயகம் திரும்பியவர்கள் குறித்த விவரங்கள் சேகரிக்கப் பட்டுள்ளதாகவும், அவர்களை பஞ்சாப் மாநில வெளிநாடுவாழ் இந்தியர்கள் துறை அமைச்சர் திரு குல்தீப் சிங் தலிவால் சந்தித்து பேசியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே தாயகம் திரும்பிய இந்தியர்களின் கை கால்களில் விலங்கு ஏதும் பூட்டப்படவில்லை என்றும், இது குறித்து வெளியான தகவல்கள் தவறானவை என்றும் பத்திரிகை தகவல் அலுவலக செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், அவ்வாறு பரப்பப்படும் காட்சிகள் கௌதமாலா நாட்டிற்கு அனுப்பப்பட்டவர்கள் என்று விளக்கம் அளித்துள்ளது.

**[]<<<>>>[]**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் உலகின் மிகப்பெரிய ஆன்மிக திருவிழாவான மகா கும்பமேளாவில் பங்கேற்பவர்களுக்காக அம்மாநில அரசு பல்வேறு வசதிகளை எற்படுத்தியுள்ளது.

கூட்டத்தில் காணாமல் போனவர்களை மீட்டு உரியவர்களிடம் ஒப்படைப்பதற்கான மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இதுவரை 13 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களை மீட்டு உரியவர்களிடம் அந்த மையம் ஒப்படைத்துள்ளது.

இதற்காக செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான முக அங்கீகார தொழில்நுட்பம் உள்ளிட்டவை இந்த மையத்தில் பயன்படுத்தப்படுகிறது.

அவர்களுக்கு மனநலன் சார்ந்த ஆலோசனையும் அளிக்கப்பட்டு வருகிறது.

மீட்கப்படுபவர்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும் வரை ஆடவர், மகளிர் மற்றும் குழந்தைகள் தங்குவதற்கென தனித்தனி அறைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே யாத்ரிகர்களின் வசதிக்காக 233 குடிநீர் தானியங்கி எந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு ரூபாய் கட்டணம் வசூலிக்கப்பட்ட நிலையில், தற்போது கட்டணமில்லாமல் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

**[]<<<>>>[]**

காஸா பகுதியில் அமெரிக்கா சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று அந்நாட்டு அதிபர் திரு டொனால்டு ட்டிரம்ப் கூறியுள்ளதை பாலஸ்தீன தலைவர்கள் நிராகரித்துள்ளனர்.

இது பாலஸ்தீனர்களின் உரிமை மற்றும் சர்வதேச சட்டத்தை மீறும் செயல் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

இதே கருத்தை எகிப்து, ஜோர்டான், சௌதி அரேபியா உள்ளிட்ட நாடுகளும் தெரிவித்துள்ளன.

பாலஸ்தீனர்களின் உரிமையை விட்டுக் கொடுக்க இயலாது என்று அந்நாட்டு அதிபர் திரு மகமோத் அபாஸ் தெரிவித்துள்ளார்.

அதிபர் திரு ட்டிரம்பின் கருத்து சர்வதேச சட்டத்தை மீறிய செயல் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

தென்கொரியா அதிபர் திரு **Yoon suk yeol**-யின் தடுப்பு காவல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

அவருடன் மேல் விசாரணை நடத்துவதற்கு ஏதுவாக இந்த காவல் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

தென்கொரியாவில் அண்மையில் ராணுவ சட்டத்தை அமல்படுத்தியதை அடுத்து, அவருடைய அதிபர் பதவிக்கான அதிகாரம் ரத்து செய்யப்பட்டது.

அந்நாட்டு நாடாளுமன்ற பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டதை அடுத்து ராணுவ சட்டத்தை அவர் மீண்டும் திரும்பப்பெற்றார்.

எனினும் ராணுவ சட்டத்தை அமல்படுத்தியதற்காக தென்கொரிய அதிபர் கைது செய்யப்பட்டார்.

**[]<<<>>>[]**

உலக சுகாதார அமைப்பிலிருந்து வெளியேறுவதாக அர்ஜெண்டினா அறிவித்துள்ளது.

சுகாதார மேலாண்மையில் குறிப்பாக கோவிட் தொற்று காலத்தில் பெரும் வேறுபாடுகள் காணப்பட்டதை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிபரின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக உலக சுகாதார அமைப்பிலிருந்து விலகுவதாக அமெரிக்கா அறிவித்திருந்த நிலையில், தற்போது அர்ஜெண்டினாவும் இம்முடிவை மேற்கொண்டுள்ளது.

**[]<<<>>>[]**

அல்ஜீரியா ராணுவ தலைமை தளபதி ஜெனரல் சைத் **sanakrika** இன்று முதல் 12-ஆம் தேதி வரை இந்தியாவில் பயணம் மேற்கொள்கிறார்.

பெங்களூருவில் நடைபெறும் ஏரோ இந்தியா விமான கண்காட்சியில் பங்கேற்கும் அவர், பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங்கை சந்தித்து பேசவுள்ளார்.

அத்துடன் பல்வேறு நாடுகளின் பாதுகாப்புத்துறை அமைச்சர்கள் பங்கேற்கும் கூட்டத்திலும் அவர் பங்கேற்கிறார்.

ராணுவ தலைமை தளபதி ஜெனரல் அனில் சௌஹான், பாதுகாப்புத்துறை செயலர் திரு ராஜேஷ்குமார் சிங் ஆகியோரையும் அர்ஜீரியாக ராணுவ தலைமை தளபதி சந்தித்து பேசுகிறார்.

**[]<<<>>>[]**

சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்த இணை 6-3, 3-6, 13-11 என்ற செட் கணக்கில் மற்றொரு இந்திய இணையான ஷிராக் துகான் - தேவ் ஜாவியா இணையை வென்றது.

**[]<<<>>>[]**

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

நாக்பூரில் இப்போட்டி பிற்பகல் மணி 1-30-க்கு தொடங்குகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரின் இரண்டாவது போட்டி வரும் ஒன்பதாம் தேதி கட்டாக்கிலும், மூன்றாவது போட்டி வரும் 12-ஆம் தேதி அகமதாபாத்திலும் நடைபெறுகிறது.

***End of News***